**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 283/2017**

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 02.02.2026 | | |
| பெயர்: | கலைச்செல்வி (PW–2 Chief ) | கணவர் பெயர்: | சிங்காரவேலு |
| கிராமம்: | அகனி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வீட்டுக்குடித்தனம் | வயது : | 34/2026 |

**<u>முதல் விசாரணை : 02.02.2026</u>**

நான் இவ்வழக்கின் 4ம் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். **(ஏற்கனவே வா.சா.1 கலையரசி மூலமாக ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு அவர் குறுக்கு விசாரணை செய்யப்படாமலேயே இறந்துவிட்டதால் ஆவணங்கள் மீண்டும் குறியீடு செய்யப்படுகின்றது.)**

1. எனது தகப்பனார் ராஜசேகரின் இறப்புச் சான்றிதழ் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகவும்

2. 2016–2017ம் ஆண்டிற்கான எனது தகப்பனார் ராஜசேகர் பெயரிலுள்ள வீட்டு வரி ரசீது அசல் **வா.சா.ஆ.2** ஆகவும்

3. 23.10.2017 தேதியிட்ட மின் கட்டண ரசீது அசல் **வா.சா.ஆ.3** ஆகவும்

4. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை **நீ.ம.சா.ஆ.1** ஆகவும், வரைபடம் **நீ.ம.சா.ஆ.2** ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.